**கவனிக்க.-** *2019.07.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2132 - 2019 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2019.07.12

*2132 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 162 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 164 |


**கவனிக்க.-** (i) விடுமுறை நாட்கள் (திருத்தம்) சட்டமூலம் 2019, யூன் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கைப் பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2019, யூன் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2019, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


161- B 81541 - 353 (2019/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

*எனது இல. 8/3/6/கொ. பி/83,*
*பிரதேச செயலகம்,*
*மாத்தளை,*
*2019.01.16.*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாணத்தில், மாத்தளை நிருவாக மாவட்டத்தில் மாத்தளை பிரதேசச் செயலாளர் பிரிவில், மாத்தளை பிரதேச செயலாளர் கலஹேபாண்டி கோராளகே லங்கா பிரியானி மதுவந்தி ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.03.29 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம், මාතලේ/ප්‍ර/264 கொண்ட வழங்கற் பத்திரத்தின் உரித்தாளரான இல. 30, கொட்டுவேகெதர பீ குடியேற்றம், மாத்தளையில் வதியும் திரு. திஸாநாயக்க முதியன்சேலாகே அப்புஹாமி வுக்கு கையளிக்கப்பட்ட, மாத்தளை மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் මා/ 1 / 192 இன் கீழ் 1982.09.30 ஆந்திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.07.28 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*மாத்தளை நிருவாக மாவட்டத்தின், மாத்தளை பிரதேசச் செயலாளர் பிரிவில் கொஹொன்சிய பத்துவில் கொட்டுவேகெதர கிராம அலுவலர் பிரிவில் கொட்டுவேகெதர கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தளை சிரேஷ்ட நில அளவையாளர் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்கள பத்திர இலக்கம் ஐ 20/4, 5 இல் வரைபட இலக்கம் மா/121 கொண்ட வரைபடத்தில் 30 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ள, 11 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட அரச காணி கொட்டுவேகெதர பீ குடியேற்றம் எனும் காணித்துண்டின் எல்லைகள் :*

*வடக்கு : துண்டு இலக்கம் 4 (வீதி) ;*
*கிழக்கு : துண்டு இலக்கம் 29 (வீதி) ;*
*தெற்கு : துண்டு இலக்கம் 4 (வீதி) ;*
*மேற்கு : துண்டு இலக்கம் 31.*

*கே. பி. கே. எல். பி. மதுவந்தி,*
*பிரதேச செயலாளர்,*
*மாத்தளை.*

*2019, சனவரி 16.*

*07 - 361*

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள தலாவ பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் என். எச். ஆர். நிஸாந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.08.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/பிர/5450 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளர் கட்டியாவ ஜனபதய எனும் முகவரியில் வசிக்கும் புண்ணியாகே ஹப்பு என்பவருக்கு கையளிக்கப்பட்டு, அநூராதபுர மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 12/4249 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.09.09 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.08.09 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*அநுராதபுர நிருவாக மாவட்டத்தின், மேற்கு நுவரகம் பளாத்த (தலாவ) பிரதேசச் செயலாளர் பிரிவின் எப்பாவல கோறளையிலுள்ள கட்டியாவ ஜனபதய 9சீ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கட்டியாவ யாய 2 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், அநுராதபுர நில அளவையாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு -- ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/கடத்திரல் வரைபட இலக்கம் ஐ. எஸ். பி. பி. 47 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட - இரேகை வரைதலில் 55 ஆம் இலக்க காணித்துண்டென காட்டப்பட்டதும் - ஏக்கர் (இல்லை) றூட் 03 (மூன்று) பேர்ச் 31(முப்பத்து ஒன்று) விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு. வயல்நிலம் :*

*வடக்கு : துண்டு இலக்கம் 45, 54 இன் பகுதி ;*
*கிழக்கு : துண்டு இலக்கம் 52. 151, 152 ;*
*தெற்கு : துண்டு இலக்கம் 56, 152, இன் பகுதி ;*
*மேற்கு : துண்டு இலக்கம் 56, 45 இன் பகுதி.*

*என். எச். ஆர். நிஸாந்த,*
*பிரதேச செயலாளர்,*
*தலாவ.*

*2019, சனவரி 30.*

*07 - 461/1*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், இராஜாங்கனை பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிகிலி எல்லே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.08.13 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்ட இலக்கம் அநு/பிர/5979 ஆம் இலக்க அளிப்புப் பத்திர உரிமையாளராகிய இராஜாங்கனை வடக்கு இவுரு யாய 05 இல் வசித்த பணாக்குர கமராளளாகே ஜோன் சிஞ்ஞோ என்பவருக்கு அளிப்புச் செய்யப்பட்டு, அநுராதபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 371 இன் கீழ் 1986.09.30 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட இதன் பின்னால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமை கோரும் நபர் இருக்கும்போது அவர் உரிமையாளராவதற்கு விருப்பமின்மை காரணமாக பின் உரித்தாளர் ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளதால் அந்த கொடுப்பனவு பத்திரம் சொல்லப்பட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.08.09 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், வடக்கு நுவரகம் பளாத்த பிரதேசச் செயலாளர் பிரிவில் எப்பாவல கோறளை 7 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரொட்ட வெவ எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட அவரது இலக்கம் 04 கொண்ட கள பத்திரத்தில் ஏ. ஜீ. சீ. ஏ. 434 ஆம் இலக்க வரைபடத்தில் 468 ஆம் இலக்க காணித்துண்டாக காட்டப்பட்டுள்ள ஏக்கர் (இல்லை) 00றூட் (ஏழு) 07 எனக் கணிக்கப்பட்டுள்ளதும் பின்வருமாறு எல்லைகளுக்குட் பட்டதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : இலக்கம் 399 பாதை ;
கிழக்கு : இலக்கம் 469 காணி ;
தெற்கு : இலக்கம் 479 காணி ;
மேற்கு : இலக்கம் 467 மேட்டு நிலம்.

பிகிலி எல்லே கெதர சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
இராஜாங்கனை.

2019, பெப்புருவரி 13.

07-461/2

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நொச்சியாகம பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் அசன்க ரத்நாயக ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் (4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1998.08.18 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்ட இலக்கம் அநுநொ/பிர/2508 ஆம் இலக்க அளிப்புப் பத்திர உரிமையாளராகிய நொச்சியாகம இகல வெடியாவவில் வசிக்கும் புன்சகேவகே பெண்டிஷ் அப்பு விற்கு அளிக்கப்பட்ட அநுராதபுர மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 2728 ஆம் இலக்கத்தின்கீழ் 2000.05.10 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காரணிக்கு பங்குதாரராகுவதற்கு சட்டரீதியாக உரித்துடையவர் யாரும் இல்லாத காரணத்தால் அல்லது பங்குதாரராகுவதற்கு ஆள் எவரும் இல்லை என அறிக்கையிட்டுள்ளதால் அவ்வளிப்பு பத்திரத்தை சொல்லப்பட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.08.09 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் நொச்சியாகம பிரதேசச் செயலாளர் பிரிவில் வடக்கு விலச்சி கோரளே இலக்கம் 337 முதிதாகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இகல வெடியாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள - பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - உடைய கள பத்திரத்தின்/- ஆம் தயாரிக்கப்பட்ட இலக்கம் - உடைய லொட் பிரிப்பு வரைபடத்தின்/- ஆம் தயாரிக்கப்பட்ட இலக்கம் 703 ஆவது விளக்க குறிப்பின் இலக்கம் 241 ஆம் காணித்துண்டாக காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் (ஒன்று) றூட் (இல்லை) 00பேர்ச் (இல்லை) ஆக விசாலத்தையுடையதும் பின்வருமாறு எல்லைகளைக் கொண்ட அரச காணி.

வடக்கு : லொட் 207 ;
கிழக்கு : லொட் 205 ;
தெற்கு : லொட் 210 ;
மேற்கு : லொட் 209.

அசன்க ரத்னாயக,
பிரதேச செயலாளர்,
நொச்சியாகம.

2018, திசெம்பர் 21.

07-461/3

இணைப்பு 9

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள கலேவெல பிரதேசச் செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் மாதுவகே யுரேஷ் நிஷாந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1998.01.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்தியம/கலே/5716 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தலகிரியாகம கலுஆரச்சியாகம எனும் முகவரியில் வசிக்கும் கோதாகொட கமகே விமலசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் මධ්‍යම/ගලේ/5716/653/99 ஆம் இலக்கத்தின் கீழ் 1999.05.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமை யாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.08.05 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

மாத்தளை நிருவாக மாவட்டத்தின், கலேவெல பிரதேசச் செயலாளர் பிரிவில் கந்தபல்ல கோறளையில் உள்ள மீவலபதஹ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மீவலபதஹ கலுஆரச்சியாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஏக்கர், 02 றூட், 00பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு, கலுஆரச்சிகம:

வடக்கு : புலங் கால்வாய் தரிசுக்காணி ;
கிழக்கு : எம். பீ. ஜீ. ஜயசிங்க உடைய காணி ;
தெற்கு : கே. ஜீ. அனுலா ராஜபக்ஷ உடைய காணி ;
மேற்கு : புலங் கால்வாய் தரிசுக்காணி.

மாதுவகே யுரேஷ் நிஷாந்த,
பிரதேச செயலாளர்,
கலேவெல.

2019, மாச்சு 18.

07- 462

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/59303.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/28/04/02/SLO/41/1481.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டம், வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கிராம அலுவலர் பிரிவில் மண்டைதீவு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் PP No. : Ya 2898 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 09 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 6.0158 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத் திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் S. P. Samy Investment Complex (PVT) எனும் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 5 மற்றும் 8;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 8 மற்றும் தரவை அரச காணி;
தெற்கு : PP YA 1000 இல் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் 3;
மேற்கு : PP YA 1000 இல் காணித்துண்டு இலக்கம் 3 மற்றும் 1.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.06.06 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2019 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2019 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான

மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்கு பெற்றுக்கொள்வோர், குறித்த இக்காணி S. P. Samy Investment Complex (PVT) நடாத்தி செல்லுதல் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2019.06.06 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஐ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஒ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஏ. இரந்திகா டபிள்யூ. குலரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

07-313

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/42064.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சிபி/பிஎல்சி/எல்2/15/04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 302, கட்டுகெலியாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பெரிமியன்குளம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் காணி அலுவலரினால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் — எனக் காட்டப் பட்டுள்ளதும் 60 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை புண்ணிய நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு சசுன ஹரிமக சம்மந்திரன சபையின் நம்பிக்கை பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பௌத்த மடத்தின் காணி ;
கிழக்கு : குணதாச என்பவரின் காணி ;
தெற்கு : வீதிக்கான ஒதுக்கு ;
மேற்கு : வீதிக்கான ஒதுக்கு மற்றும் பௌத்த மடத்தின் காணி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.04.11 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடுசெய்யப்பட்ட 2019 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2 % வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி புண்ணிய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2019.04.11 ஆந்திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

07 - 314

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/41707.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- சிபிசி/எல்சி/எல்டி/8/1/14/171.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், உடபலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கீரபனே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கீரபனே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் சி. எம். 320051 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 4 : 6 என காட்டப்பட்டுள்ளதும் சுமார் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. உக்கல்ல பியசிங்க அமில சுதேக பியசிங்க என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : (கொங்கிரீட் பாதை) காணித்துண்டு இலக்கங்கள் 137 மற்றும் 223;
கிழக்கு : 228 மற்றும் 227 ஆம் இலக்க காணித்துண்டுகளின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : 229 ஆம் இலக்கத்தின் காணித்துண்டின் எஞ்சிய பகுதி;
மேற்கு : 127 மற்றும் 229 ஆம் இலக்க காணித்துண்டுகளின் எஞ்சிய பகுதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் முன்னோக்கி (2015.05.27 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2015 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம்.- வருடாந்த குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிடம் அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஈ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(உ) 2015.05.27 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், குடும்பத்தினுள் அல்லது இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது மாற்றம் செய்தல் தவிர்ந்த, வேறு எவ்வித கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஏ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப் பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. அயோத்யா ஜயவர்த்தன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

7-359

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/55683.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சிபி/பிஎல்சி/எல்8/11/4.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 340, அடம்பனே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நுககஹவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற அலுவலர் வரைந்த சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 11 ஏக்கர் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி இந்திரா வன்னிநாயக்க என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : ஜே. ரணசிங்க மற்றும் ஆர். கே. சந்திரா பத்மினி மற்றும் ஆர். எம். தர்மசேன என்பவர்கள் அத்துமீறிப் பிடித்துள்ள சேனைக்காணி ;
கிழக்கு : ஜே. ரணசிங்க மற்றும் ஆர். கே. சந்திரா பத்மினி மற்றும் ஆர். எம். தர்மசேன என்பவர்கள் அத்துமீறிப் பிடித்துள்ள சேனைக்காணி ;
தெற்கு : துணைப் பாதைக்கான ஒதுக்கு மற்றும் ஜே. சிரியலதா, டபிள்யூ. ஏ. டி. சுகதபால மற்றும் ரணசிங்க என்பவர்கள் அத்துமீறிப்பிடித்துள்ள காணி ;
மேற்கு : பிரதேச சபைப் பாதைக்கான ஒதுக்கு.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2018.08.09 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.08.09 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

07-360

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/57448.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல. : எஸ்பிஎல்சி/GAL/3/3/89.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், தவலம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 228, மலகல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹலவடிகல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற உத்தியோகத்தரினால் வரையப்பட்ட TR இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 10 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : R. S. சோமதாச அவர்களுக்கு சொந்தமான காணி;
கிழக்கு : R. S. சோமதாச அவர்களுக்கு சொந்தமான காணி;
தெற்கு : ஹல்விடிகல - தம்மாலா வீதி மற்றும் T. H. வில்லியம் அவர்களுக்கு சொந்தமான காணி;
மேற்கு : T. H. வில்லியம் அவர்களுக்கு சொந்தமான காணி மற்றும் R. S. உபவன்ச அவர்களுக்கு சொந்தமான காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.04.11 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 2% வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக இருந்தால் காணியின் தற்போதைய பெறுமதியின் 4% இந்தக் குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை கொடுபடல் வேண்டும் மற்றும் கடந்த ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட தொகையின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிரந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.04.11 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங் களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப் பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

T. U. K. சட்டன்நாயக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகொத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

07-463

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/50172.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சிபி/பிஎல்சி/எல்6/4/04/கெவி.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், கெபிட்டிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 30, கலவெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அம்பகெப்புவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் சுமாரான சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு இலக்கம் - எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 80 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற் காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் பொது முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வரு மாறு:

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : ஐராங்கனி என்பவரின் காணி ;
தெற்கு : கணுகஹவெவவுக்கு செல்லும் பாதைக்கான ஒதுக்கு ;
மேற்கு : பூல்கஹவெவவுக்குச் செல்லும் பாதைக்கான ஒதுக்கு.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக் கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2017.01.13 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2017 ஆம் வருடத்திற்கான காணியின் வர்த்தக பெறுமதியின் 4 % வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்;

தவணைப்பம்.- வருடாந்த குத்தகையின் மும்மடங்கு தொகை ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியி லிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செய லாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2017.01.13 ஆந்திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

07-464

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/54796.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.: SPLC/DEV/04/NELL/484.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், நெலுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 235, பனாகொட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பனாகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற உத்தியோகத்தரினால் வரையப்பட்ட TR இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.20369 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : D. L. பிரேமவந்த அவர்களுக்கு சொந்தமான காணி;
கிழக்கு : அனுருத்திக அபேயதுங்க அவர்களுக்கு சொந்தமான காணி;
தெற்கு : ஜானக அவர்களுக்கு சொந்தமான காணி;
மேற்கு : நெலுவ-தெல்லாவ வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.04.11 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 2% வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000) அதிகமாக இருந்தால் காணியின் தற்போதைய பெறுமதியின் 4% இந்தக் குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை கொடுபடல் வேண்டும் மற்றும் கடந்த ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட தொகையின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.04.11 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ரீ. யூ. கே. சட்டன்நாயக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 12.

07-465

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.